TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

**(Under Section 173 BNSS)**

C 8213019

1. District : மாவட்டம் Vellore | PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Vellore | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 7/2024 | Date: நாள் 23.10.24

2. (i) Act சட்டம்: The prevention of corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106 BNSS

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 22.10.2024 | Date to : நாள் வரை 23.10.2024

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2024 | Time : நேரம் 09.30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Volume – II / 2024 | Time : நேரம் 23.10.24 @ 10.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக – written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – RTO Check post, Katpadi @ Christianpet, Vellore At about 15 Kms North East

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. Vijaya Saravana Kumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1997 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

   (f) Occupation : தொழில் Senior Revenue Inspector | (g) Address : முகவரி O/o the Inspection cell office, Collectorate, Sathuvachari, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. Tmt. Sridevi Jayanthi. MV Inspector (Non Technical) RTO check post, Katpadi @ Christianpet, Vellore Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................—.......................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....................—..................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Sanjay 23/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station (signed) 23.10.2024
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2024 @ 10.45 Hrs

Name: பெயர் ......G. Mythily......
Rank: நிலை ......................No. எண்
INSPECTOR OF POLICE, V 4 AL, VELLORE

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 23.10.2024-ஆம் தேதி 09.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.N.விஜய சரவணக் குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 23.10.2024 அனுப்புநர் N. விஜய சரவணக் குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் துணைக்காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 22.10.2024-ஆம் தேதியன்று இரவு சுமார் 22.00 மணியளவில், வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, காட்பாடியில் உள்ள போக்குவரத்து துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பாரதேவி ஜெயந்தி என்பவர் சோதனை சாவடியை கடந்து செல்லும் கனரக வாகனங்கள், பிற மாநில வாடகை வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களில் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் நேரிடையாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் அதிகாலை நேரங்களில் பெருமளவு தொகையினை கட்டாயப்படுத்தி அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூல் செய்வதாகவும், மேலும், அவ்வாறு வழங்க மறுப்பவர்களின் வாகனங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்தும் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு மற்றும் அலைகழிப்பு ஏற்படுத்துவதாகவும், மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் பெருமளவு தொகையினை லஞ்சமாக பெறுவதாகவும் எனக்கு தகவல் கிடைத்ததை, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவித்து, அவரின் உத்தரவுபடி வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளருக்கு 22.10.2024 இரவு சுமார் 23.30 மணியளவில் தெரியப்படுத்திய பின் இன்று 23.10.2024-ஆம் தேதி விடியற்காலை 03.15 மணியளவில் நானும் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு மேற்படி காட்பாடி கிருஷ்டியான்பேட்டையில் உள்ள மண்டல போக்குவரத்து சோதனை சாவடியிடம் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள காலை 04.05 மணிக்கு வந்தோம். மேற்படி சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலர்களிடம் இருதுறை திடீர்சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, சீருடையில் இருந்தவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் R. பாரதேவி ஜெயந்தி (49/2024), கணவர் பெயர் ஜெகன்நாதன் என்றும், தான் காட்பாடி கிருஷ்டியான்பேட்டை போக்குவரத்து சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ.) ஆக கடந்த 02.06.2023-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், தான் இராணிப்பேட்டை மாவட்டம் நவல்பூரில் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் ஆஜரில் இருந்த மற்ற நபர்களை விசாரிக்க (1) திரு.கல்யாணசுந்தரம், உதவியாளர், போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் (2) திருமதி.ரமீலா,

அலுவலக உதவியாளர், போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் (3) திரு.ராஜன், எண்.7/1, சி.எம்.ஜான் தெரு, செங்குட்டை, காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் (தற்காலிக கணினி பணியாளர், போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம்). மேற்படி நபர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் தாங்கள் வந்த நோக்கத்தை கூறி, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பித்தோம். பின்னர், பணியில் சீருடையில் இருந்த திருமதி.ஸ்ரீதேவி ஜெயந்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அவர்களை எப்போதில் இருந்து பணியில் இருப்பதாக கேட்டதற்கு தான் 22.10.2024 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் தற்சமயம் வரை பணியில் உள்ளதாக சொன்னார். அவரை, காவல் ஆய்வாளர் திருமதி.G.மைதிலி அவர்களால் திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ஏதுமில்லை. அவருடைய Hand Bag-ஐ சோதனை செய்ய அதில் பணம் ரூ.3,000/- காணப்பட்டது. மேற்படி பணம் அவருடைய சொந்த பணம் என்று தெரிவித்ததாலும், அலுவலக பணியாளர் கையிருப்பு பதிவேட்டில் முறையாக பதிவு செய்திருந்ததாலும், சரியாக காணப்பட்டதாலும் அப்பணம் அவருடைய வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலக உதவியாளர் திருமதி.ரமீலா அவர்களை காவல் ஆய்வாளர் திருமதி.மைதிலி அவர்கள் மூலமாக சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதுமில்லை. அவருடைய Hand Bag-ஐ சோதனை செய்ய அதில் பணம் ரூ.1,240/- காணப்பட்டது. மேற்படி பணம் அவருடைய சொந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் அவருடைய வசமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், சோதனைச்சாவடியில் இருந்த திரு.கல்யாண சுந்தரம், உதவியாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.290/- இருந்தது மேற்படி பணம் அவருடைய சொந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் அவருடைய வசமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் ஆஜரில் மற்றொரு ஆண் நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் ராஜன் என்றும், தான் இந்த சோதனை சாவடியில் பணியாளராக (தனி நபர்) மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் பணி அமர்த்தப்பட்டு சோதனை சாவடி சம்மந்தமான வேலைகளை செய்து வருவதாகவும், சோதனை சாவடிக்கு வரும் வாகனங்களில் வரும் சரக்கு குறித்து ஓட்டுனர்கள் ஆஜர் செய்யும் ரசீதில் முத்திரையிடுவது, மோட்டார் வாகன ஆய்வாளர்களின் சீல் வைப்பது மற்றும் அலுவலக பணிகளை செய்து வருவதாகவும் அதற்காக தனக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் ரூ.1,000/- கொடுப்பார்கள் என்று கூறினார். மேற்படி நபரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர், சோதனை சாவடி வளாகத்தில் வெளிப்பக்கத்தில் இருந்த இரண்டு ஆண் நபர்களில் முதல் ஆண் நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் சேட்டு என்றும், தான் இந்த சோதனை சாவடியில் பணியாளராக (தனி நபர்) வேலை செய்து வருவதாகவும், சாலையில் செல்லும் வாகனங்களை நிறுத்தும் பணியை செய்து வருவதாகவும், அதற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் ரூ.1000/- கொடுப்பார்கள் என்று கூறினார். மேற்படி நபரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.360/- இருந்தது. அப்பணம் அவருடைய சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் ஜனார்தனன் என்றும் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களுடைய சகோதரன் என்றும் அவர்

பணிக்கு வரும்போது அவருடைய காரில் அழைத்து வந்து உடன் இருந்து மீண்டும் வீட்டுக்கு அழைத்து செல்வதாக தெரிவித்தார். அவரை சோதனை மேற்கொள்ள அவரிடம் பணம் ரு.290/- இருந்தது. அப்பணம் அவருடைய சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர், மோட்டார் வாகன சோதனைச்சாவடி கௌண்டர் உள்ள அறையை சோதனை செய்தபோது, மோட்டார் வாகன சோதனை சாவடிக்குள் நுழையும்போது இடது புறத்தில் உள்ள கணினி மேஜையின் வலது புறத்தில் உள்ள இழுவறையை சோதனை செய்ய, அதில் சீல்களும், காகிதங்களும் இருந்தன. அதனை அடுத்துள்ள கணினி மேஜையின் வலது புறத்தில் இருந்த இழுவறையை சோதனை செய்ய அதில் பணமானது தனித்தனியாக 500,200,100 ருபாய் நோட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களிடம் விசாரிக்க, அவர் நேற்று 22.10.2024 காலை 08.00 மணி முதல் 23.10.2024 காலை 04.15 மணி வரை 84 வாகனங்களுக்கான தற்காலிக அனுமதி சீட்டு (Temporary Permit) வழங்கியதாகவும், அதற்கான வரி மற்றும் இணக்க கட்டணம் ஆக மொத்தம் ரு.1,87,307/- வசூல் செய்யப்பட்டது என சொல்லி, அதன் Account Statement எடுத்து கொடுத்தார். அதில் User ID: VKALYANASUNDARAM Period 22.10.2024 to 23.10.2024 எனவும், Total 1,87,307/- என இருந்தது. பின்னர், கட்டு கட்டாக இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரு.1,87,307/- சரியாக இருக்கவே அப்பணம் திருமதி. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த User Wise Transaction Details Statement-தாளில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.விஜயசரவணகுமார், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.ஸ்ரீதேவி ஜெயந்தி மற்றும் துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு.S.சங்கர் ஆகியோர் கையொப்பம் செய்து, அந்த பட்டியல் கைப்பற்றப்பட்டது. மேலும், அதே இழுவறையில் ஒரு பிளாஸ்டிக் டிரேயில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களிடம் விசாரிக்க, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரம் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரு.28,900/- இருந்தது. மேற்படி தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்டாத மற்றும் உரிமை கோராத அப்பணம் கைப்பற்றப்பட்டது. அலுவலக முதல் அறையினை அடுத்து தெற்குப்பக்கம் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் பயன்படுத்தும் ஒரு சிறிய அறையினை சோதனை செய்ய அந்த அறையின் கிழக்குபக்கம் போடப்பட்டிருந்த மேஜையின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு அடியில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் பணம் ரு.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களிடம் விசாரிக்க, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரம் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். மேற்படி தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்டாத மற்றும் உரிமை கோராத அப்பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர், அலுவலக அறைக்கு பின்புறம் உள்ள கழிவறை, சமையலறை மற்றும் பதிவேடுகள் வைக்கும் அறை காணப்பட்டது. கழிவறை, சமையலறையினை முழுமையாக சோதனை செய்ய அவற்றில் பணம் ஏதும் இல்லை. அதனை அடுத்து பதிவேடுகள் வைக்கும் அறையில் தனித்தனியாக மூன்று இரும்பு ரேக்குகளும், ஒரு இரும்பு பீரோவும் காணப்பட்டது. மேற்படி அறையினை சோதனை செய்ய அறையில் இருந்த இரும்பு

பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு இடையில் இரண்டு 500 ரூபாய் கட்டுகள் காணப்பட்டது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.1,00,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி. ஸ்ரீதேவி ஜெயந்தி அவர்களிடம் விசாரிக்க, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரம் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். மேற்படி தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்டாத மற்றும் உரிமை கோராத அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் காட்பாடி போக்குவரத்து சோதனைச்சாவடி வருகைப்பதிவேடு, பணியாளர்கள் விவரப்பதிவேடு (Daily Duty Roster) மற்றும் பணியாளர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேடு ஆகியவை விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.1,38,900/- மற்றும் ஆவணங்களும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 23.10.2024-ஆம் தேதி விடியற்காலை 04.05 மணிக்கு துவக்கி காலை 08.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடைபெறும் விதிமிறல்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் லஞ்சமாக பணம் வசூல் செய்தும் அரசின் வருவாய்க்கு இழப்பு ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டு வந்த திருமதி.ஸ்ரீதேவி ஜெயந்தி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் எனபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இருதுறை திடீர் கூட்டு சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம், கணக்கு கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.1,38,900/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை சம்மந்தமான அசல் செயல்முறை ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxx 23/10/2024 N. விஜய சரவணக் குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். Inspector Tmt.G.Mythily, to register a case under the appropriate section of law and take up investigation. Sd/- xxxxxx 23/10/2024, DSP/V&AC/VL.

Sir, Received the complaint and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.07/2024, u/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS on 23.10.2024 at 10.00 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. Sd/- xxxxxxxx (G.Mythily) 23.10.2024, Ins/VAC/Vellore.

23.10.2024.

(G. MYTHILY)
Inspector of Police
V & AC, Vellore.